**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**<u>முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி., பி.ஏ.,பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.</u>**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>IA No.03/2025</u>**

**In**

**<u>O.S No.135/2016</u>**

குருஜலா ஜெய ராமையா ......**மனுதாரர்/2 ம் பிரதிவாதி**

**//எதிர்//**

ராஜாமணி ......**எதிர்மனுதாரர்/வாதி**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பத்மநாமன்..B.A.,B.L.,அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கோவிந்தராசு.,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கட்டளை 08 விதி 01 மற்றும் சி.பி.சி பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:-</u>**

இதன் அசல் வழக்கானது 2 ம் பிரதிவாதியான மனுதாரரின் மறு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இவ்வழக்கு 2 ம் பிரதிவாதியான பி.வா.சா.1 சாட்சியான மனுதாரை வாதி தரப்பு வழக்கறிஞர் தனது குறுக்கு விசாரணையில் தாவா கிரைய ஆவணத்தில் கண்டுள்ள தொகை வருமானவரி கணக்கில் வருமா ? மேற்கண்டுள்ள வருமானவரியின் கணக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா ? அதற்கு லைசென்ஸ் உண்டா ? என்று மனுதாரரிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டுள்ளதில் மனுதாரரால் வருமானவரி

கணக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என பதில் கூறியுள்ளார். எனவே மேற்கண்டுள்ள ஆவணங்கள் மனுதாரரின் கட்சியை பலப்படுத்தக்கூடிய ஆவணங்கள் ஆகும். எனவே மனுதாரர் தரப்பில் உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம்:-**

இந்த அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்துவருகிறது. மேலும், மனுதாரர் தனது மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அவரது தரப்பு எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களானது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டு தற்போது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பது எவ்வகையிலும் நிலைநிற்கத்தக்கதில்லை. மனுதாரர் மேற்படி வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

3. **தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

நாளது தேதியில் இம்மனுவுடன் இணைந்த வழக்கிடை மனு எண்.02/2025 மனு ரூ.1,000/- செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளதால் இம்மனுவும் செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு ரூ.1,000/- செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.01.27 16:58:14 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**

**I.A.No. 03/2025**

**O.S.No. 135/2016**

**நாள். 27.01.2026**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**அறந்தாங்கி.**